சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்

முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி

2025-ம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண் 124/2024-ல் உள்ள**

**இடைக்கால மனு எண் 2/2024**

J. ஜெபமணிதாஸ் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ஷபீக்
2. சலீம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 24.04.2025 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. மோகன்தாஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டும் வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின்கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் விசாரணை நடை முறை சட்டம் கட்டளை 38 விதி 5 ன் கீழ் தாவா சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்து உத்தரவிட கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

3. மனுதாரர் இம்மனுவில் அசல் வழக்கினை எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ.5,70,356/-த்தை திரும்ப பெற கோரி தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடம் 15.08.2023ம் தேதி பெற்றுக்கொண்ட கடன் ரூ.5,00,000/-ற்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளதாகவும், மேற்படி கடனை மனுதாரர் திருப்பி கேட்ட பிறகும், திருப்பி கொடுக்கவில்லை என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தினை விற்பனை செய்துவிட்டு வேறு மாநிலத்திற்கு சென்று தலை மறைவாகி விட முயற்சி செய்து வருவதால் தாவா கடனுக்கு ஈடாக தொகை செலுத்தி வைக்க உத்தரவிட்டும், தவறும் பட்சம் தாவா சொத்தினை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

4. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. **பிரச்சனை/** ;?

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பபட்டது. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடம் பெற்றுக் கொண்ட தாவாத் தொகை ரூ.5,00,000/-த்தை திருப்பி தராமல் இருப்பதற்காக மனு சொத்தினை விற்பனை செய்து விட்டு வேறு மாநிலம் சென்று தலைமறைவாகி விட முயற்சி செய்து வருவதால் இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

6. மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர்கள் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை மாற்றம் செய்வதற்கு தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்கள் என்பது தெரிய வந்ததாகவும் அவ்வாறு எதிர்மனுதாரர்கள் அவரது சொத்தினை விற்பனை செய்துவிட்டால் மனுதாரருக்கு தாவா தொகையை வசூலிக்க இயலாமல் போய்விடும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர்கள் தனக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தினை யாருக்கு எவ்வளவு தொகைக்கு

விற்பனை செய்ய முயற்சி செய்து வருகிறார் என்பது குறித்து எவ்வித சங்கதியும் எடுத்துக்காட்டவில்லை. மேலும் மனுதாரர் கடனுறுதி சீட்டின் அடிப்படையில் மட்டுமே கடன் கொடுத்துள்ளார். தாவா சொத்தினை ஈடாக பதிந்து கடன் எதுவும் கொடுக்கவில்லை என்பது தெரிய வருகிறது. மேலும், பாதுகாக்கப்படாத கடன் தொகையை பாதுகாக்கப்பட்ட கடன் தொகையாக மாற்றுவதற்கும் மற்றும் சொத்தினை ஜப்தி செய்வதன் மூலம் எதிர்மனுதாரர்களை பணிய வைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியையும் நீதிமன்றங்கள் கவனமுடன் கையாள வேண்டுமென நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Raman Tech and Process Engg. Co., and another Vs. Solanki Traders 2008 (2) SCC 302* என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளது. அதுபோல இவ்வழக்கிலும், மனுதாரருக்கு ஆதரவாக முதல்நிலை வழக்கு இருந்தாலும் கூட எதிர்மனுதாரர்கள் தனது சொத்தை விற்பனை செய்து விட்டு வேறு ஊருக்கு சென்று தலைமறைவாகி விட உத்தேசித்து வருகிறார்கள் என்பதையும், மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணையை நிறைவேற்றி தொகையை திரும்ப பெறுவதை தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையும் மனுதாரர் நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்ட தவறி விட்டார். எனவே, இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு ஜூன் திங்கள் 20 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>/ ;**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>/ ;**

- இல்லை -

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>/ ;**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>/ ;**

- இல்லை -

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்

PSC
Draft/Fair Order
I.A.No.2/2024 in
O.S.No.124/2024
Dt. 20.06.2025.